2420

# வண்ணையந்தாதி

# சிங்கை நகரந்தாதி.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சபை,
பதிவு இல. 73
10. 5. 1950
அறக்கட்டளை நிலையம்,
கசெட் இல. 14805
7. 6. 1968

உ

க. சண்முகலிங்கம்

திருமதியார்

மஞ்சுபாரணம்

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

யாழ்ப்பாணம்

வண்ணைநகர்

சி. ந. சதாசிவபண்டிதர்

அவர்களாலியற்றப்பட்ட

# வண்ணையந்தாதி

வண்ணைநகரூஞ்சல்

# சிங்கைநகரந்தாதி

## சித்திரகவிகள்.

இவை

சிங்கப்பூர்,

சி. கு. மருதாம்சாயபு அவர்களுக்குச்

சொந்தமாகிய

ஸ்ரீஜெயவேந்திரசாலையில் அச்சிடப்பட்டன.

சர்வஜித்து ௵ சித்திரை ௴

1887.

Registered Copyright.

உ

# அறிவிப்பு.

——oo——

☞ இலக்கண விலக்கிய வித்துவான்களுக்கும் மற்றை னவோர்களுக்கும் மிக மரியாதையுடனறிவிப்பதி யாதெனி ன்னுடைய சமேலீட்டினு லிப் பிரபந்தங்களை நானறிந்து துணிந்து ப்புடுத்தினே னாயினு மெங்கேனு மிலக்கண விலக்கிய சங் பரீதங்கள் காணப்படுமேல் தாங்கள் கிருபையுரிந்து தனிக் டிதமூலமா யடியேற்கு நேரா யறிவிப்பீராயின் மறுமுறை திரு த்தி வெளிப்படுத்தக் காத்திருக்கின்றேன்.

குற்ற மேதெரி வார்குறு மாமுனி
சொற்ற பாவினு மோர்குறை சொல்வராற்
கற்றி லாவென் கவிவழு வாயினு
முற்று நாடிவல் லோருய்த் துரைக்கவே.

இங்ஙனம்,

சி. ந. சதாசிவபண்டிதன்.

சிங்கப்பூர்,
சர்வஜித்து ஹூ
சித்திரைமீ

---

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

சிதம்பரம்
அப்பியாசமடத் தலைவராகிய
## ஸ்ரீலஸ்ரீ, முத்துக்குமாரசுவாமிகள்
அருளிச்செய்த
## நிலைமண்டிலவாசிரியப்பா.

நீர்வளர் தெண்டிரை நிலம்வா னிரவி
பேர்வளர் மதியொடு பிறங்கு சராசர
மயனரி யுருத்திர னனந்த சத்தியும்
வியனுல கதனில் விளங்கெணுன் கறமுங்
கந்த விஞயகக் கடவுளர் தமையுந்
தந்துந் தாழாத் தலைவிகா மாட்சி,
பஞ்சாட் சரத்திற் பரையரு ளாகி
நஞ்சாய் விளங்கு நவட் சரத்தைப்
பிஞ்செனத் தள்ளிப் பீடுயி ரெழுத்தைச்
சிக்கெனப் பிடித்துச் சிற்பரத் தடைத்துப்
பக்குவர் தமக்குப் பகரத் துவித
நிலையினை யன்பாய் நிறுத்திடுந் தேவி,
யலையுந் திரையை யாடையா யுடுத்த
செல்வப் பூமட் டிகழீ ழமென்னும்
வடபான் முகத்தின் வயங்கும் வண்ணை
யிளமா மதிநுத லிலங்குந் திலத
மாக வணிபெற வகன்ற வாலய
மேகஞ் சூழ விளங்கு மதிற்புறம்,
பூசை காணிய புனிதரை யழைப்பா
ஞசை யுடனே யணிமணி யேற்றிக்
கும்பா பிஷேகங் குறைவறச் செய்து;

கம்பா நதிவருங் கம்பனைக் குழைத்த
வன்னையைத் துதிக்கு மந்தா தியொன்றும்
பன்னு மூஞ்சல் பகரெச் சரீக்கையு
மெண்ணுநற் பராக்கு மெழின்மங் களமு
நங்கை வள்ளி நாயகள் பேரிற்
சிங்கையந் தாதியுஞ் சித்திர கவிகளு
மங்கள மாக வரைந்தனன்; யாரெனின்,
இலக்கண விலக்கிய விருங்கட லுண்டு
கலக்கமிலாமற் கலையெலா முணர்ந்தோன்
சொற்பொருட் சாரன் றுதிகொளா சாரன்
தக்கசற் சங்கன் றமிழிற் ப்ரசங்கன்
வண்ணைமா நகரில் வாழுந் திகழ், சி. ந.
திண்ணிய நற்சதா சிவபண் டிதனே.

முற்றிற்று.

---

யாழ்ப்பாணம்

## ஸ்ரீல ஸ்ரீ, ஆறுமுகப்பெருமான் அவர்கள்

மாணாக்கரும்மருகரும்

வித்வசிரோமணியுமாகிய

## ஸ்ரீமத், ந. ச. பொன்னம்பலம்பிள்ளையவர்களுடைய

மாணாக்கருளொருவராகிய

## ஸ்ரீமத், வி. செல்லையரவர்கள்

சொல்லியவெண்பாக்கள்.

பார்க்கவெளி யென்றிருந்தேன் பாவையுற்றுப் பார்த்தளவி
லார்க்கு மரும்பொருளை யாற்றுமே - தேர்ச்சிமிகு
வண்ணைச் சதாசிவ மாபண் டிதன்சொன்ன
வெண்ணத் தொளிர்பா வினம்.

வண்ணைச் சதாசிவம் வாழுமருட் காமாட்சி
நண்ணுமபி ஷேக நடாத்தியபின் - விண்ணப்பப்
பூசை புரிவான் பொருளாகத் தித்திக்கு
நேசகவி சொன்னு னிசம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

காமாக்ஷியம்மை

பேரிற்பாடிய

# வண்ணையந்தாதி

காப்பு.

## விநாயகவணக்கம்.

ஆரணம் போற்று மருள்வண்ணைக் காமாட்சி
காரணம் பாடக் கரந்திகழும் - வாரணமே
சிந்தனைக்க ணுைத்திருத்திச் சிற்பரத்தி னுத்தமத்தை
வந்தனைக்க ணத்திருத்தி வா.

## சிவவணக்கம்.

என்புந் தலையோடு மின்பா யணிந்தெவர்க்கு
மன்புதனைக் காட்டு மருட்சிவனே - யுன்பரையு
முன்மயமாய் மேவி யுறுவதா லிக்கவியிற்
சின்மயமாய் நிற்பாய் சிறந்து.

## பரைவணக்கம்.

மூவர்க்கு முதற்பொருளாய் முத்தொழிற்கும்வித்தாகி
நாவிற்குமனத்திற்கு நாடரியபேரறிவாய்த்
தேவர்க்கு முனிவர்க்குஞ் சித்தர்க்கு நாகர்க்கும்
யாவர்க்குந்தாயாகு மெழிற்பரையை வணங்குவாம்.

### சுப்பிரமணியவணக்கம்.

அறுவிதசமயத்தோர்க்கு மறுமுகசாமியாகிச்
செறிபரப்பிரமம்யானே யென்றுசின்மயிலிலேறிக்
குறுமுனிக்கருளிச்சீவக் குகைதொறும் வீற்றிருந்த
மறுவிலாக்குகனைப்போற்றி மாய்த்தனென்பிறவியெல்லாம்.

### ஆசிரியவணக்கம்.

முத்தமிழை மொண்டு முறைப்படியே தம்மடியார்
தத்துவத் துக்கேற்கத் தந்தருளு - வித்தகனு
மத்த னமரவதி யண்ணலடிப் போதைநிதஞ்
சித்தமுடன் வைப்பேன் சிரம்.

## நூல்.

சீராருஞ் செல்வி திகழ்வண்ணைக் காமாட்சி
காராரும் பூஞ்சோலைக் கற்பகமே - நேராருங்
காமாட்சி யீஸ்வரியே காஞ்சிபுர மெய்ப்பொருளே
காமாட்சி தந்தருள்வாய் காண். (௧

காண்டற் கரியவண்ணைக் காமாட்சி யீஸ்வரியே
வேண்டி யுனைப்பணிய விண்ணவர்க - ளீண்டியிங்ஙன்
வந்துநிதம் போவரெனின் மாநிலத்தோர் செய்கையினை
யெந்தவிதஞ் சொல்வே னினைத்து. (௨

இணங்கார் புரமெரித்த வீச னருளே
வணங்கார் மனவிருளை மாற்று - மணங்கார்
வண்ணைநகரக் காமாட்சி மாதேவி யுன்ற
னிணையடியா மெஞ்ஞான வென்று. (௩

என்று முனைப்பணிந்தா லின்பவண்ணைக் காமாட்சி
யுன்றன் றிருவடியென் னுள்ளமதி - னின்றிடவே
வைத்தருள்வாய் மாதரசே மாநிலத்து வல்வினையின்
வித்ததனைத் தீய்த்திடுவாய் மெய். (௪



மெய்யாதி யைம்பொறியின் வீறுங் கதவினையா
னையா வகைபூட்டு நாயகியே - கையாற்
கருப்பு விலைவளைக்குங் கார்வண்ணைக்கா மாட்சி
யிருப்பவர்க்கு நற்கதியை யீ. (௫)

ஈயாத மாக்களுக் கென்றும் பயனிலையென்
றோயாம லெண்ணுன் குயரறத்தைத் - தாயாகும்
வண்ணைநகர்க் காமாட்சி வையகத்திற் செய்தருள
வெண்ணிவந்தா ளென்றே யறி. (௬)

அறிவுக் கறிவாகி யாருயிருக் குள்ளே
செறியுஞ் சிவகாமித் தேவி - நெறியுடனே
மாலயனைப் பெற்றருள்வாள் வண்ணைநகர்க் காமாட்சி
யாலய மென்னகமே யாம். (௭)

ஆகிநின் றேகி மறைந்தே யருள்புரியும
பாகமெலாங் காட்டும் பகவதியே - யாகமங்கள்
போற்று மயிராணி பொன்வண்ணைக் காமாட்சி
மாற்றியருள் வன்பிணியை மாய்த்து. (௮)

மாயப் பவமனைத்தும் வன்பகைஞ ரெல்லோருந்
தேயப் பணியணிவான் செய்கலையே - யாய
வணைநகரக் காமாட்சி வந்தனைசெய் வார்க்குன்
மணிநகரந் தந்தருள்வாய் மன். (௯)

மன்னருஞ் செல்வரு மற்றைப் புவியோரும்
பன்னருஞ் சீரார்நின் பாமலரை - யுன்னியே
வண்ணைநகர்க் காமாட்சி மாதேவி யுன்பெருமை
யெண்ணிநெஞ்சில் வந்தணைவா ரிங்கு. (௰)

இங்குலிக மேனிதரு மேகாம்பர் தாமகிழ
வங்குலிக பாசமுட னங்குசமுங் - கொங்குலவு
நீலம்பு மிக்குவில்லு நீள்வண்ணைக் காமாட்சி
காலமெலாங் கொண்டருள்வாள் கை. (௰௧)

கைப்பொருளோ டெப்போதுங் கார்வண்ணைக் காமாட்சி
முப்போது முன்னை முறைப்படியே - கைப்போது
கொண்டர்ச் சனைசெய்து கும்பிட் டிறைஞ்சுபவ
ரெண்டிக்கும் வாழ்வ ரினிது. (கஉ)

இனம்புரக்கு மோர்வண்ணைக் காமாட்சி யீசன்
வனம்புரக்கு ஞான வளமே - சினம்புரக்குஞ்
சிந்தைக் கறையழித்துச் செய்யசிவத் தோடணைய
முந்தை யருள்புரிவாய் முன். (கங)

முன்னாளிற் செய்த முழுவினைக்கிந் நாட்பயனா
மின்னாளி னன்மை யியற்றிடுதன் - மின்னா
ரிடையவண்ணைக் காமாட்சி யீஸ்வரியே ஞான
விடையுடையாய் மாதவத்தோர் வீறு. (யச)

வீறான மெய்ப்பொருளே வேதத்தி னுட்பொருளே
மாறான பொய்ச்சமய மாளவே - கூறான
தெய்வச் சிவக்கொழுந்தே சீர்வண்ணைக் காமாட்சித்
தையலரு ளான்வடிவே தான். (கரு)

தானாகி வந்து தனிக்காமக் கோட்டமதி
லானேறி வந்த வுயிர்க்கெல்லா - மானேறித்
தக்க சிவபூசை தந்தவண்ணைக் காமாட்சி
மிக்க புகழ்படைத்த மின் (கசா)

மின்னாருஞ் செஞ்சடையான் வேதியன்மா லுன்பெருமை
பன்னாளுஞ் சொல்லிப் பரவுகின்ற - ரென்னாலே
சொல்ல லெளிதாமோ சுத்தவண்ணைக் காமாட்சி
யில்லமுண்டு ஞானிமனத் தில் (யஎ)

இல்லறமு நல்ல துறவறமு மிப்புவியி
னல்லறமே யென்று நவின்றிடுவார் - பல்லறமுஞ்
செய்தருளும் வண்ணைநகர்க் காமாட்சி சேவடியை
யெய்தி வணங்கடியா ரெண். (யஅ)



எண்ணான் கறமு மியல்வண்ணைக் காமாட்சி
கண்ணான் மதனயனைக் கண்ணனையும் - விண்ணாதி
பொய்யாது தந்தருள்வாள் பூமாதர் தங்களையு
மெய்யாக வையகத்தின் மேல். (ககூ)

மேலாரு நாக விறப்பதுமன் றன்பிலத்திற்
சேலாரு கண்ணி சிவபூசை - யாலால
கண்டற் கினியவண்ணைக் காமாட்சி யீஸ்வரியே
வண்டற் பதலருளு வாள். (உய)

வாட்கொண்ட கண்ணி மலர்மா வரிசபிப்பாற்
சேட்கொண்டன் மேனி செறிந்தனள்கா - ணட்கொண்ட
வண்ணைநகர்க் காமாட்சி வாலாம் பிகைபதத்தை
யெண்ணி வணஞ்சேந்தா ளீடு. (உக)

ஈட்டும் பொருளை யியல்வழியி லீயாது
பூட்டு முலைமாதர் பொய்ம்முயக்கி - னாட்டியே
கட்டழியா வண்ணைநகர்க் காமாட்சி யீஸ்வரியே
சிட்டர்களைப் போற்றிடுவாய் தேர்ந்து. (உஉ)

தேர்ந்தறியக் கூடாத் திருவண்ணைக் காமாட்சி
வார்ந்தொழுகு வாரி வளைபுவியி - னோர்ந்தொருவ
ரோரருத்த மீயி லொருகோடி யாய்ப்பெருக்கிப்
பாரருத்தம் வைப்பாய் பதி. (உங)

பதிபசு பாசம் பகர்ந்திடி னுன்னிற்
பதியரு ளாலன்றிப் பாரா - ரதிபதியா
வண்ணைநகர்க் காமாட்சி மாதேவி யீஸ்வரியே
விண்ணை யெமக்கருள்வாய் விண்டு. (உச)

விண்டை யயனை விறலா ருருத்திரனைப்
பண்டே படைத்த பராபரையே - யண்டமெலா
மோர்நொடியிற் பெற்ற வுயர்வண்ணைக் காமாட்சி
நேர்பெருக வென்மனத்தே நில். (உரு)

நிற்குந் திருவருளே நீங்காத வன்பிணிநோ
யற்பப் பொழுதி லகலுமே - சிற்பரையா
வண்ணைநகர்க் காமாட்சி மாதேவி பொற்பதத்தைக்
கண்ணதனாற் கண்டிடுகிற் காண் (௨௬)

காணும் பொழுதுனைக் கண்ணீர் சொரிந்திடவே
யாணம் பெருக வழுவோர்க்குத் - தாணுவினைக்
காண மிகவண்ணைக் காமாட்சி தந்தருள்வாய்
பாணர்புக ழோரெழுத்தின் பால். (௨௭)

பாலான நீறு பசுமைதரு மக்குமணி
மேலான மேனி விளங்கவே - சேலான
கண்ணி வணைநகரக் காமாட்சி யீஸ்வரியே
பண்ணிவைப்பா யென்றும் பரிந்து. (௨௮)

பரிவுடனே பஞ்சாட் சரப்பொருளைப் பண்பாய்
விரிவுடனே யானறிய விள்ளா - யரியயனுங்
காணாத வண்ணைநகர்க் காமாட்சி யுன்னடியை
நாணாதென் கன்மனத்தே நாட்டு. (௨௯)

நாட்டும் பரையெழுத்தி னாயகியே பிஞ்செழுத்தை
யோட்டி யெனைத்தீட்டி யோய்ந்திருக்க - வீட்டினையே
காட்டிமறைந் தாள்வண்ணைக் காமாட்சி யென்பிணியை
வாட்டி மனமகிழ வந்து. (௩௰)

வந்தே யுனைப்போற்று மானிடவர் மேலவராய்ப்
பந்துசனத் தோடு பயன்பெறுவார் - சந்ததமு
நீதி தயையிரக்க நிற்குவண்ணைக் காமாட்சி
பாதமதை நெஞ்சதனாற் பார்த்து. (௩௧)

பார்த்துப் பொறாமைப் படுகின்ற பாதகர்கள்
வேர்த்து விறைத்து விழுநரகி - லார்த்தெவரு
முய்ய வழியில்லை யோர்வண்ணைக் காமாட்சி
பெய்யுமரு ளெங்களரும் பேறு. (௩௨)



பேறிலாப் பொய்யுரைக்கும் பேதையர்கள் போநரகின்
கூறெலாம் யான்விளக்கல் கூடாது - வீறுபெறு
வண்ணைநகர்க் காமாட்சி மாறங்கை யாரியையே
தண்ணருளை மற்றவர்மேற் சாத்து. (௩௩)

சாத்திரங்க ளாயாதுன் சந்நிதியில் வந்தெவருங்
கோத்திரங்கள் பேசிக் கோளுரைக்கி - னேத்திரமுங்
காத்திரமும் போகுங் கலைவண்ணைக் காமாட்சி
தோத்திரத்தா லேகுந் துயர். (௩௪)

துயரகற்றுந் தேவியரே தூய்வணைக்கா மாட்சி
மயலகற்றி யாளு மணியே - செயலகற்றுன்
பூசை யினைக்குறைத்துப் புற்கைகரந் துண்பார்க
ளாசையுறும் பேய்க்கணங்க ளாய். (௩௫)

ஆயுங் கலையுணர்ந்த வாரியரைத் தூஷிப்போர்
தேயும் பொருளோடு தேர்ந்தறிமின் - பாயும்
விடையேறி வைத்தருள்வாய் மேல்வணைக்கா மாட்சி
கடையேற வென்சிரத்திற் கால். (௩௬)

காலன் வருமுன்னர் கைகால்கள் சோருமுன்னர்.
கோலமுட னுன்பாதக் கோலமதான் - மேலகத்துக்
கேக விரைவாக வின்றுவண்ணைக் காமாட்சி
யோகமதைக் காட்டிடுவா யுள். (௩௭)

உள்ளத் தழுக்கிருக்க வூத்தையினை மேற்போக்கி
வெள்ளைத் துணியணியும் வீணர்களைத் - தள்ளுதற்கு
முண்ணரக முன்படைத்தாய் மொய்வண்ணைக் காமாட்சி
தண்ணளியை யன்பரிடந் தந்து. (௩௮)

தந்தி முகத்தோற்குஞ் சண்முகற்குந் தாயாகி
வந்தவண்ணைக் காமாட்சி மாதேவி - சிந்தையினை
யுள்ளவழுக் கத்தனையு மோட்டி மிகத்துலக்கு
வள்ளன்மிகு நற்கருணை மாற்று. (௩௯)

மாற்று பிறவிமயல் வண்ணைநகர்க் காமாட்சி
யாற்றன்மிகு கோயி லதிகாரி - தேற்றமுடை
ணாகமங்கள் பூசை யறிந்தவற்றைச் செய்பவனே
மோகமெலா முன்னே முனிந்து. (சய)

முனிவருந் தேவரு மொய்த்துவரு சத்தி
யனைவருமுன் றாள்பணிவா ரன்றோ - வினமிகுந்த
தெங்கம் பழஞ்சொரியுந் தென்னிலங்கை வண்ணைநகர்
தங்குபுகழ்க் காமாட்சித் தாய். (சக)

தாயுநீ தந்தையுநீ தற்பரசிற் சத்தியுநீ
யாயுங் சலைஞான வாதியுநீ - மாயனுநீ
வேதனுநீ தாணுவுநீ மேல்வண்ணைக் காமாட்சி
பூதமுநீ யைம்பொறியு நீ. (சஉ)

நீந்தற் கரிய நெடும்பிறவிச் சாகரத்தி
லேந்தியெனை யாட்கொள்ளு மீஸ்வரியே - பாந்தளணி
வானுக் கினியாளே வண்ணைநகர்க் காமாட்சி
யேனிக் குவந்தா யியம்பு. (சங)

அம்புமலர் பிடிக்கு மாதிவண்ணைக் காமாட்சி
யும்பர் தொழவாழு முத்தமியே - வம்புசெறி
வஞ்சகர்கள் கன்னெஞ்சில் வைக்குதியோ வுன்பதத்தைத்
தஞ்சமென வந்தவரைத் தாங்கு. (சச)

தாங்கற் கரிதான சங்கையிலா வல்பிணிக
ளோங்கலென வென்னை யுறுத்துவதாற் - பாங்குமிகு
வண்ணைநகர்க் காமாட்சி மாதுமையே யுன்கரத்தா
லெண்ணியெடுத் தாட்கொள்வா யின்று. (சரு)

இன்றைக்கோ நாளைக்கோ யின்னுஞ் சிலபொழுதோ
வென்றுசொலும் வார்த்தைக் கிலக்காக - நின்றிலங்குங்
காத்திரத்தை வண்ணைநகர்க் காமாட்சி யுன்பதமாம்
பாத்திரத்தில் வைத்தேன் பணிந்து. (சசா)



பணிந்தாற் பதமருள்வாய் பார்வதியே நீற்றை
யணிந்தாற் பவப்பிணியை யாற்றாய் - துணிந்தாற்
கணம்பிரியா வண்ணைநகர்க் காமாட்சி யம்மை
யணம்பிரியா வாருயிருக் கன்பு. (சஎ)

அன்புக் கிருப்பிடமே யானந்த மாமயிலே
யென்புருக வேபணிவா ரெல்லோரு - மின்புறவே
வந்தணைவாய் சின்மயமாய் வண்ணைநகர்க் காமாட்சி
தந்தணைவாய் கஞ்சமலர்த் தாள். (சஅ)

தாடலையின் மெய்ப்பொருளைத் தக்கபடி காட்டியருட்
கூடலையுங் காட்டுங் குடிலையென் - பாடலையே
மாலையென வுன்மார்பில் வண்ணைநகர்க் காமாட்சி
சால வணிந்தருள்வாய் சார்பு. (சகூ)

சாரங்க மொய்க்குமலர்த் தார்வண்ணைக் காமாட்சி
பேரங்க முத்தின் பெருஞ்சரத்தி - ணோரங்க
மிந்திரவி கோடி யெழிலாய்த் திரண்டிடினுஞ்
சிந்தையினு மொப்பரிது சீர். (ருய)

## வாழி

வேதஞ் சிவநூல் விளங்குசைவ வைதிகமும்
மாதந் தருமேக மங்கைகற்புஞ் - சூதகிழற்
கம்ப னருள்வண்ணைக் காமாட்சி பொற்பதமு
மம்புவியும் வாழ்கவே யாம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

முறுவலித்தருளுந்தோறு மொய்த்தெழுநிலவுபொங்கி ... ... *
யுறைபடத்துளித்தவில்லே யொழுங்குறக்கிடந்தாலென்னப் ... *
பிறைவடஞ்சுமந்தகொங்கைப் பேரமைத்தோளிமம்மர்க் ... ... *
கறைதபுகாமக்கண்ணி கழலிணைகருத்துள்வைப்பாம். ... ... (க)

எண்கணுளனை யெழில்வலக்கண்ணினும்பதும ... ... ... *
வண்கணுளனை மற்றிடைக்கண்ணினுநுதன்மே ... ... ... *
லொண்கணுளனை நள்ளுநடைக்கண்ணினுமுலவாப் ... ... ... *
பெண்கணுயகி யீன்றனண்முத்தொழில்பிறங்க. ... ... ... (உ)

சைவச்செந்தழலின் யாங்களாகுதிச்சமிதையாகச் ... ... ... *
செய்வித்து வேள்வியாற்றுஞ் சிவபிரானருளினாலே ... ... *
யுய்வித்துமீள வெம்மையுதவிய கருணைநாட்டத் ... ... ... *
தெய்வப்பூங் கொம்பரன்னசெல்வி நின்சரணம்போற்றி. ... ... (ங)

திருவேகம் பத்தமர்ந்தருளுந் தேவர்பிரானார்புடைநின்ற ... ... *
மருவார் துளபத்தொடை மவுலிமாயோன்றன்னையெதிர்நோக்கிக் *
கருவார் கூந்தற்றடங்காமக் கண்ணிதனக்கு மற்றெமக்கும் ... *
பெருவாய்மையினாற் கடிவிழாத்திருநாள்பிறங்கப்புரிகென்றாள்.... (ச)

* ஒன்பதிற்றுநாள்விழாவணிநிகழ்ந்தபினுற்ற வீரைந்தாநா ... *
ளின்பமீக்கொளப் பங்குனியுத்திரத்திமையவர் குழாத்தோடு ... *
மன்பதைத்திரண்மகிழ்ந்தெழுந்தார்ப்புறமணவினைக்கவின்கொள்வா *
னென்பணிப்பிரான் மஞ்சனச்சாலையினினிதெழுந்தருளுற்றான். (ரு)

கன்னனெய்கனிபாலின்ன கமழ்மதுப்பருக்கால்கி ... ... ... *
யென்னையாளுடைய கோமானேடவிழ்கமலச்செங்கை ... ... *
தன்னிசையுலகமீன்ற தனிமுதற்பிராட்டியான ... ... ... *
கன்னிகைவைத்துநீர் பெய்தளித்தனன்கமலக்கண்ணன். ... (சா)

இருமுதுகுரவர்பாத மிமையவர்வணங்கியிந்தத் ... ... ... *
திருமணங்காண்டல்பெற்றே முய்ந்தனந்திரைநீர்வைப்பின் ... *
மருவினர்வதுவை செய்யுமிடந்தொறுமன்னியாங்காங் ... ... *
கிருநலமுதவல்வேண்டு மிவ்விருவீருமென்றார். ... ... ... (எ)

---

* எங்களீஸ்வரியாகிய காமாக்ஷியம்மைக்கு வஷந்தோறும் ஒன்பது நாள் திருவிழாநடத்திப் பத்தாநாள் **பங்குனியுத்திரத்தன்று** மணவிழா நடத்தி வருவது முறைமையாகும். இப்பத்துநாளுங் காஞ்சிபுராணம் படித்துப் பதினோராநாளூஞ்சலுற்சவம் நடத்துவதுத்தமம்.

உ
சிவமயம்.

காமாக்ஷியம்மை
பேரிற்பாடிய

# வண்ணைநகரூஞ்சல்

## தேவிமகத்துவம்.

தேவியொடு மீசன் செறிந்திரா னேயாயி
னாவியொன்றை யுற்றறியா தாம்.

## காப்பு.

சீர்கொண்ட பலமணியுண் டாகி மின்னுஞ்
செம்மைதிக ழீழவள நாட்டி னோர்பால்
நீர்கொண்ட செந்நெல்வயல் வண்ணை வாழும்
நிலைவிளங்கு காமாட்சி யூஞ்சல் பாட
ஏர்கொண்ட பொன்னுலகை யாளு மிந்த்ர
னிமையவரோ டெல்லோரும் வணங்கி வாழ்த்துங்
கார்கொண்ட திருக்கரங்க ளைந்து பெற்ற
கணபதிதா ளெந்நாளுங் காப்ப தாமே.

## நூல்.

நலந்திகழு நாதவிந்து கால்க ளாக
நயந்திகழும் பரம்பொருளோர் விட்ட மாக
வலந்திகழுங் காலமெலாம் வடங்க ளாக
வரந்திகழும் வேதமெலாம் பலகை யாக
புலந்திகழும் பிரணவம்பொன் விதான மாக
பொருடிகழு முபநிடதம் பீட மாக
கலந்திகழுஞ் சூலைசெறி வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (க)

உருவோங்கு சாஸ்திரங்கள் தண்ட தாக
உளமோங்கு மாகமங்கள் தநழி யாக
திருவோங்கு கலைக்ஞானங் நூல்க ளாக
திறமோங்கு புராணமெலாந் திரிக ளாக
அருளோங்கு நின்பெருமை நெய்ய தாக
அருவோங்கு பரஞ்சுடரே விளக்க தாக
கருவோங்கு ஜனனமொழி வண்ணை வாழுங்
கரீமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (௨)

சிலைவிளங்கு நுதற்பிறையி லமுத மூற
சீர்விளங்கு மலரடியின் முத்தி தேற
நிலைவிளங்கு சந்நிதியி னீதி வீற
நிறைவிளங்கு வேதமெலா மறையோர் கூற
மலைவிளங்கு மாதவர்க டவத்தி லேற
மனுவிளங்கு நெறிகளெலா நெஞ்சி லாற
கலைவிளங்கு ஞானமொளிர் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (௩)

அருத்தமிகு நவரத்ந கிரீட மின்ன
அணிவளருங் காதணிக ளசைந்து துன்ன
திருத்தமிகு மங்குசபா சங்கண் மன்ன
சிறப்புமிகு நீலமும்விற் கரும்பும் பின்ன
பொருத்தமிகு பொற்சிலம்பு வேதம் பன்ன
புகழ்வளரு மடியவர்கள் பாத முன்ன
கருத்துமிகு மறைபெருகு வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (௪)

அந்தமலர் சடைநாகஞ் சுட்டி யாட
அகன்றகுழை யாடிட மூக்குத்தி யாட
சந்தமலர் கங்கணங்கள் பதக்க மாட
தங்கமிகு சரிவளைமே கலைக ளாட
பந்தமல முத்துசரம் பசும்பட் டாட
பதமுறுபா டகஞ்சதங்கை குலுங்கி யாட
கந்தமலர் வாவிதிகழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (௫)



மனயாருந் திரிமலமா மழுக்கை நீக்கி
மாலாரு மைம்புலனுங் கதவைத் தாக்கி
வனமாரும் விடையமெலாம் விழலே யாக்கி
மாண்பாருஞ் சைதன்ய சொரூபந் தூக்கி
இனமாரும் பரையெழுத்தின் பயனை நோக்கி
எழிலாரு மத்துவித முத்தி தேக்கி
கனமாரும் பொன்மதில்சூழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (௬)

விண்வளரு மிந்திரவி கவிகை வாங்க
வீணைவளர் தும்புருநா ரதர்கள் பாட
பண்வளரு மரம்பையர்க ணடன மாட
பலம்வளரும் வாயுசா மரைகள் வீச
எண்வளரு நிதிக்கிழவ னடப்பை தாங்க
எழில்வளரு முனிவரெலா மாசி கூற
கண்வளரு மாடமிகு வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (௭)

புவிபடைத்த பிரமன்கைத் தாளம் போட
பொலம்படைத்த வம்பலவ னடன மாட
சுவிபடைத்த விநாயகர்சப் பாணி நீட
தயைபடைத்த வறுமுகவேற் சத்தி கூட
பவிபடைத்த விந்திரன்வந் தேவ ரோட
பலம்படைத்த வச்சுதனுங் கருணை தேட
கவிபடைத்த புலவர்புகழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (௮)

விதிவிளங்கு மாகமங்கள் வேள்வி நாட்ட
விண்விளங்குஞ் சோதியெலாம் விளக்கந் தீட்ட
பதிவிளங்கு நூல்களெலாம் பத்தி காட்ட
பலம்விளங்கும் யாகமெலாம் பவத்தை யோட்ட
நிதிவிளங்கு பதுமசங்கம் நினைவைக் கூட்ட
நிறம்விளங்கு மலர்மாதர் வடந்தொட் டாட்ட
கதிவிளங்கு சுரர்பரவு வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (௯)

இழைபூண்ட பராபரையே யாடீ ரூஞ்சல்
ஈசனிடத் தாரியையே யாடீ ரூஞ்சல்
மழைபூண்ட மலைமகளே யாடீ ரூஞ்சல்
மகதநன்னாட் டீஸ்வரியே யாடீ ரூஞ்சல்
கழல்பூண்ட சிவகாமி யாடீ ரூஞ்சல்
காமக்கோட் டத்துமையே யாடீ ரூஞ்சல்
கழைபூண்ட சோலைதிகழ் வண்ணைவாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். (௰)

சிறையகலு மலைமகளே யாடீ ரூஞ்சல்
திரையகலு மலைமகளே யாடீ ரூஞ்சல்
மறையகலு மாதேவி யாடீ ரூஞ்சல்
மருளகலு மாதேவி யாடீ ரூஞ்சல்
பிறையகலு வாணுதலீ யாடீ ரூஞ்சல்
பிழையகலு வாணுதலி யாடீ ரூஞ்சல்
கறையகலும் பண்ணைசெறி வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல் (௰க)

தேமருவு வேதசிவா கமங்கள் வாழி
திருமருவு கற்புடைய மாதர் வாழி
பூமருவு நால்வருணத் தவர்கள் வாழி
பொழின்மருவு மானிரையும் முகிலும் வாழி
பாமருவு புலவரொடு பைங்கூழ் வாழி
பயன்மருவு விபூதியுமஞ் செழுத்தும் வாழி
காமருவு பண்ணைசெறி வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே வாழி வாழி. (௰உ)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.



திருவாருரு பதமேதரு தேவீ யெச்சரிக்கை
சிலைவாணுத லொளியாய்வளர் தேனே யெச்சரிக்கை
மானேவரு கையானிட மாதே யெச்சரிக்கை
மறைபோற்றிடு பதமேவிய மங்கா யெச்சரிக்கை
பஞ்சாட்சரத் தொன்றாய்வளர் பரையே யெச்சரிக்கை
பகையாதரு ணீலோற்பல பாணீ யெச்சரிக்கை
பதுமன்பணி பதந்தந்தருள் பரமே யெச்சரிக்கை
எழிலாய்வளை கழையேந்திய விறைவீ யெச்சரிக்கை
ஏகாம்பரர் குழையுத்தழு வின்பே யெச்சரிக்கை
உருவாகிய பாசாங்குச வுமையே யெச்சரிக்கை
தருமம்மெனு மிடபம்மிவர் தாயே எச்சரிக்கை
சிவனாரிரு விழிபொத்திய திறமே யெச்சரிக்கை
சிவபூசைசெய் திறங்காட்டிய தெளிவே யெச்சரிக்கை
சீராகிய கருணாநிதித் திருவே யெச்சரிக்கை
பேராகிய சிவனாரருட் பேறே யெச்சரிக்கை
துணையாகிய விளமாமுலைத் தோகா யெச்சரிக்கை
வணைமாநகர்க் காமாட்சியம் மணியே யெச்சரிக்கை.

## பராக்கு.

தனைமுழுகும் பூங்கொன்றைச் செல்வீ பராக்கு
மானிமிருங் கையேந்தி மானே பராக்கு
சந்த்ரமுகத் தேவியரே தாயே பராக்கு
சதுர்ப்புஜநல் லுத்தமியே சத்தீ பராக்கு
சிவனருமைத் திருமேனி குழைத்தாய் பராக்கு
அரனருமைக் கண்புதைத்த ஆயே பராக்கு
அடியவர்கள் பிணியகற்று மன்பே பராக்கு
மிடிமையினை நீக்கியருள் மேலோய் பராக்கு
மகப்பேறு தந்தருளு மாதா பராக்கு
அகத்தேறு மயலகற்று மருளே பராக்கு
ஆனைமுகத் துத்தமனை யளித்தாய் பராக்கு
ஆறுமுகத் தெம்பரனை யீன்றாய் பராக்கு
உருள்வண்ணைப் பூவாளு முமையே பராக்கு
அருள்வண்ணைக் காமாட்சி யம்மே பராக்கு.

வெள்ளிமலை நாயகிக்கு மங்களம் - வேதம்
வேண்டுமருட் பூஷணிக்கு மங்களம்
நான்குகரத் தம்மையர்க்கு மங்களம் - நல்ல
நாதாந்த வஸ்துவுக்கு மங்களம்
பாசாங்குச பாணியர்க்கு மங்களம் - வல்ல
பராசத்தி யுமையவட்கு மங்களம்
நீலோற்பல தாரணிக்கு மங்களம் - நித்ய
நிமலபரி பூரணிக்கு மங்களம்
கருப்புவிற் றரித்தவர்க்கு மங்களம் - கண்ணிற்
காட்சிதரு மங்கையர்க்கு மங்களம்
முத்திதரு மம்பிகைக்கு மங்களம் - மூல
மும்மூர்த்தி யானவர்க்கு மங்களம்
மகதநீட் டாரியைக்கு மங்களம் - எங்கள்
மனோன்மணி சவுந்தரிக்கு மங்களம்
காஞ்சிபுரக் கன்னியர்க்கு மங்களம் - ஞானக்
கருப்பொருளா மன்னையர்க்கு மங்களம்
கருணாகரத் தேவியர்க்கு மங்களம் - வண்ணக்
காமாட்சி யம்மையர்க்கு மங்களம்.

முற்றிற்று.

---

## தேவாரம்.

முதிரமங்கை தவஞ்செய்தகாலமே
முன்புமங்கை தவஞ்செய்தகாலமே
வெதிர்களோடகில் சந்தமுருட்டியே
வேழமோடகில் சந்தமுருட்டியே
யதிரவாறுவரத் தெழுவத்தொடே
யானெயாடுவரத் தெழுவத்தொடே
கதிர்கொள் பூண்முலைக் கம்பமிருப்பதே
காஞ்சிமாநகர்க் கம்பமிருப்பதே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# சுப்பிரமணியசுவாமி

பேரிற்பாடிய

# சிங்கைநகரந்தாதி

காப்பு.

## விநாயகவணக்கம்.

லகெலாம் வாழ வுயர்ஞானப் பைங்கூழ்
லமெலாங் கொண்டு நயக்க - மலமெல்லாம்
போக்கு மதநீர் பொழிகளிறிவ் வந்தாதி
ாக்க வருள்புரியு மாம்.

## நூற்பயன்.

முத்திதரும் பத்திதரு மும்மலத்தை யோட்டுமருட்
சத்திதருஞ் சண்முகனைச் சார்விக்குஞ் - சித்திதருஞ்
சிங்கைநக ரந்தாதி சிந்தையிலே வைப்போர்கண்
மங்களமோ டெங்கணும்வாழ் வார்.

## அவையடக்கம்.

ற்றவர்க்கு முன்னே கருதா கமப்பொருள்க
டற்றெனவே விள்ளவிதைச் செப்புவனோ - வெற்றிபுகழ்
வேல னருள்பொங்கும் வெள்ளைக் கலித்துறையைச்
ால வுணர்வார் தமக்கு

## ஆக்கியோன்பெயர்.

ீர்வளர் சிங்கை நகர்ச்சே யடியிணைச் செம்மலரைக்
ார்வளர் சோலைநற் கட்டளை நூறு கலித்துறையாம்
பேர்வளர் காரிகை பின்னிய கூந்தற் பிணைத்திடுவான்
ார்வள ரீழப் பதியான் சதாசிவ பண்டிதனே.

## நூல்.

பூமகண் மூவரும் போற்றும் புதுநகர்ச் சிங்கைவெற்ப
நாமகண் வேண்மட வார்நயந் தேடி நலியுமென்னை
வாமகண் மங்கை யருளான் விளங்க வழங்கினன்காண்
ஏமகன் மான்மகட் சேரும் புனிதவுன் சேவடிக்கே. (௧)

சேவடி கொண்டெனைக் காத்தருள் சிங்கை நகர்ப்புனித
பாவடி கொண்டு வளர்தெங்கஞ் சோலை பலவுடைய
பூவடி கொண்ட பெருமான் மருகவென் பொய்நசையைத்
தாவடி கொண்ட மயிலேறி வந்து தணிக்குதியே. (௨)

தணியா வினையைத் தணிப்பாய் சரவணத் தாமரையி
லணியா வொளிரு மயில்வே லரச வருளுஞ்சுப்ர
மணியா வுனைநம்பி வந்தேன் மனத்துயர் மாற்றிவைப்பாய்
திணியா வளந்தருஞ் சிங்கையின் வேல சிவகுருவே. (௩)

சிவகுரு வாகிய சிங்கைய னேயுனைச் சேர்ந்தனன்யான்
பவகுரு வாகிய பாதகர் சொல்லின்பொய்ப் பாங்கையெல்லா
மவகுரு வாமென் றகற்றுபு நின்ற வடியிணைகள்
தவகுரு வென்று தமியே னறிந்தனன் சாவிலையே. (௪)

இலையே பொறுமை யிலையே யறிவு மெழினலமும்
இலையே யுறுதி யிலையே சுகமு மிரும்புவியில்
இலையே யுறவு மிலையே துறவு மியற்புகழும்
இலையே யெனினு மிருக்குமென் சிங்கை யிறையடியே. (௫)

இறையடிப் பட்டுச் சிரசினி லென்ற னிருவினையுங்
கறையடிப் பட்டுக் கரந்திடுங் காதற் கழிமனத்தின்
மறையடிப் பட்டு வளந்தான் வெளிப்படு மாமயிலின்
சிறையடிப் பட்டுச் சிறந்திடுஞ் சிங்கா புரத்தரசே. (௬)

சிங்கா புரந்திகழ் தேவே சிவசுப் பிரமணியா
கங்கா தனைய கதிர்வேன் முருக கருதரிய
பொங்கா டரவன் புதல்வா பொலியுமுன் பூங்கழலை
இங்கா தரவெனக் கொண்டே னினியெனக் கேன்பயமே. (௭)



பயமே பொருந்திப் பதைக்குநெஞ் சேயுன் பயனெனைய
பயமே தருஞ்சிங்கைப் பாய்மயில் வேலன் பதமலரைப்
பயமே செறியச் சிரசினிற் சூடிய பாக்கியத்தாற்
பயமே யுதர முடையார் நயத்தைப் பழிப்பார்களே. (௮)

பழிப்பார் மறைமனம் வைப்பார் பரத்தையர் பல்கலையிற்
கழிப்பார் பொழுதைக் கருதார் நினதடி கட்கடைக்கண்
விழிப்பார் விபூதி தரியார் விமலன் விதியையெல்லா
மழிப்பார் வளஞ்சிங்கை வேலா வுனையறி யாதவரே. (௯)

ஆதவர் போற்று மருஞ்சிங்கை வேலநின் னூர்பணிசெய்
யாதவர் நித்த மலைதலுந் துன்பத் தழுந்தலும்பொய்
யாதவர் சொன்ன வசனமு மற்றைய யாவுமறை
யாதவர் பெற்ற பெரும்பே றெனக்கு மளிக்குதியே. (௰)

துதிக்கின்ற வாணவக் கூத்துங் குலநலக் கொள்கைகளு
மதிக்கின்ற மாடமு மாளிகைத் தோப்பு மனைவிமக்கள்
விதிக்கின்ற கட்டளைப் பட்டங்கள் யாவும் விழலெனயான்
பதிக்கின்ற நெஞ்சைத் தருவாய் பழஞ்சிங்கைப் பண்ணவனே (௧௧)

பண்ணவ னேசிங்கை மன்னவ னேயுனைப் பாடுநரை
விண்ணவர் போன்மல வன்சிறை மீட்க வியனுலகிற்
கண்ணவ வாணவக் காரிருட் சூரனைக் காய்ந்திடுவா
யெண்ணவ வீரர் வலம்வர யானைக் கிளையவனே. (௧௨)

இளையவ னேயென் பிணியினைத் தீர்த்துவித் தீர்வினையைக்
களையவ னேபொரு ளாவியுங் காயமுங் கையில்வைத்தேன்
விளையவ னேமுத்தி சிங்கையின் வேல வியப்புறுவெண்
வளையவ னேர்மரு கோனெனக் கொண்மயில் வாகனனே. (௧௩)

கனமே குழையணி வள்ளியை வேட்டநற் கார்மயில்வா
கனமே யுடையாய் கடுஞ்சூ ரெனுமலக் கட்டிருளுக்
கனமே யயனும் வியந்திடு ஞானக் கணைதொடுக
கனமே வளர்தெங்கஞ் சிங்கையில் வாழுமென் கற்பகமே. (௧௪)

கற்பக வேல்விடு கந்தா வுனைநம்பிக் கைவருதற்
கற்பக லாகக் கசியு மனமொன்று காட்டிவைப்பாய்
கற்பக ராமொழி கண்ணார் கருணைக் கடலனைய
கற்பக மேசிங்கை யற்புத மேயெனைக் காத்தருளே. (௧௫)

காத்தாண் முருக கடையேன் கருவழித் தேறும்வண்ண
நாத்தா துதித்திட நானென தென்னா நமக்கடையை
நீத்தா ருயிரி னிலைகண்டு பின்னர் நெறியடையப்
பூத்தாள் குமர புகழ்ச்சிங்கை நாயக பூதலத்தே. (௧௬)

தலமுத லந்த முடிவாய்ப் பொலிகின்ற தத்துவம்யா
னலவென்று காண வருளா யெனையிவ் வகிலமதிற்
பலதெய்வ முண்டெனப் பன்னிடும் பேயர் பகைத்துமென்னை
சலதர மேயுந் தழைபொழிற் சிங்கைத் தனிமுதலே. (௧௭)

தனித்திடு மன்னுயிர் சித்துரு மாயச் சடமெனவே
சனித்திடு தத்துவ மென்றே யுணர்த்திய தண்ணருளாற்
பனித்திடு நெஞ்சை யுனைத்தொழ வென்றும் பணித்தருள்வாய்
குனித்திடு மாமயிற் கோலா கலசிங்கைக் கோமளமே. (௧௮)

கோமள மேவிய கோலமும் பன்னிறக் குக்குடமுஞ்
சாமள மேவிய மஞ்ஞையுஞ் சண்முகத் தாமரையு
மாமள மேவிய வேலுங் கரங்களு மாறிரண்டு
சீமள மேவிய சிங்கையி னாயக தேசிகனே. (௧௯)

தேசிகள் பாயுந் தெருமலி சிங்கைத் திகழ்நகர
பேசிய வின்று கடந்தே றவைத்த பெருங்கருணை
வேசிகள் போல மறைத்திடுந் தத்துவ வேடமெல்லாம்
வீசிய வேல வுனையன்றி யுண்டோ விரும்புதற்கே. (௨௰)

விரும்புங் கருணை விளக்காய் விளங்குநல் வேலதனா
லரும்புங் கருமைக் குழம்பென மீறிய வாணவமா
மிரும்புங் கரைத்துப்பின் சித்துரு நானென் றெனக்குரைத்தாய்
கரும்புங் கரைபுரள் சிங்கையைக் காக்குங் கலாநிதியே. (௨௧)



நிதியே யிரண்டு நிரந்தரம் போற்றுமுந் நேமிமன்னன்
பதியே யெனக்குப் பிறந்தே யிறக்கின்ற பான்மையில்லா
மதியே யெனயான் வளர்ந்தே தளரும் வழக்கமில்லாக்
கதியே யிதுவெனச் சிங்கைநன் னாயக காட்டினையே. (௨௨)

காட்டி மறைக்கின்ற பாசக் கயிற்றிற் கனபிறவி
மாட்டி மறையின் விரதமு நித்த மருவியது
மாட்டிய பொம்மையின் கூத்தா வுனையன்றி யானொன்றையுங்
கூட்டிக் குறைக்க வியலாது சிங்கைக் குலக்கொழுந்தே. (௨௩)

கொழுந்தே குவலய நீயே குணகுணிக் கோத்திரமும்
விழுந்தே தொழுபவர் நீயே யெவையும் விளங்கநல்கா
யெழுந்தே வருபவர் நீயே குறையினி யேதுதொழ
வுழுந்தே * யருள்பொழு தாயினுந் தாசிங்கை யூர்க்கரசே. (௨௪)

ஊரார் புகழு முயர்சிங்கை வேல வுனதுதொழி
னீரார் சிருட்டி திதிலய நீண்ட நிகழ்மறைவு
மேரார் விளக்க மிவையெவ் விடத்து மிருப்பதையா
னேரார் களிப்பி னிலையேறிக் கண்டன னித்தியமே. (௨௫)

நித்திய மேயெனக் கன்னிய மேயிலை நின்னடிகாண்
சத்திய மேயுயி ரென்றே யிருக்குமென் சாதனையான்
மத்திய மேயிலை யானந்தப் பேற்றின் மலிந்திலங்கும்
பத்திய மேதரு வாய்சிங்கை வேல்வரு பாணியனே (௨௬)

வேல்வரு பாணிய வேதன் சிறைபுரி மேலவநின்
னால்வரு பான்மை யறிந்திடி னின்னடி யானெனிற்பொய்
யால்வரு பெண்டிரும் பிள்ளையும் யாவு மனித்தியமாம்
பால்வரு தெங்கின் பழந்தருஞ் சிங்கைப் பரம்பொருளே. (௨௭)

பரம்பொரு ளேமனம் பாவையர் மீதினிற் பாய்பொழுதுன்
னரம்பொரு வேலெடுத் தெய்திடு வாயி னயன்மடியச்
சிரம்பொரு பாணி யுடையாய் செழுஞ்சிங்கைத் தீவுசரா
சரம்பொரு சாமி தமியேன் பிழைத்தனன் சண்முகனே. (௨௮)

* எதுகை நோக்கியுளுந்துழுந்தெனப்பட்டது.

சண்முக னேபன் னிருகர னேவள்ளி சார்பவனே
யுண்முக னேயென் னுளிவிளக் கேயுய ரோம்பதத்தின்
கண்முக னேகரி மாமுக னோர்வரு கந்தமுன்னில்
விண்முக னேபொழி வார்சிங்கை வேல வெளிப்படவே. (௨௯)

வெளிபட வாழுமென் னுவியைக் காக்கின்ற வேலுடையாய்
வளிபட வாவியின் மாண்பொறி யாக வயங்குகந்த
தெளிபட வாணவத் தீதே யொழிதருஞ் சிங்கைவெற்ப
களிபட முத்தி தருவாய் கருவழி காரணனே. (௩௰)

காரணங் கற்பனை யாவுங் கடந்த கருணைவள்ளா
லாரணங் கேட்டய னுணவம் போக்கி யசுரமன்ன
வாரணங் கொண்ட கொடியாய் மரகத மாமயிலின்
பேரணங் காய்கதி தந்தருள் வாய்சிங்கைப் பேரரசே. (௩௧)

பேறெனக் கென்னை பெருமா னெனுஞ்சுப் பிரமணிய
வீறெனக் கென்றும் விலகா திருக்க வியனுலக
மாறெனக் கேயினி மாமயி லேறி வருவதென்றோ
கூறெனக் கின்று குமரா வளஞ்சிங்கைக் குன்றவனே. (௩௨)

குன்றம் வளருங் குறிஞ்சிக் கிழவமுன் கொல்லவருங்
குன்ற முரித்த பெருமான் குமர குறத்தியரைக்
குன்ற னுளத்தைக் கொடுத்தவ னேயுல கோர்பவங்கள்
குன்ற வருஞ்சிங்கைக் கோவே யசுரரைக் கொன்றவனே. (௩௩

கொன்றே பசுகர ணங்கோ கரணங் குலவவைக்கு
மன்றே தினகரன் றந்தா னொளியென யான்புகழ்ந்து
நின்றே யுனைத்தொழ வந்தருள்வாய் சிங்கை நின்மலவா
கன்றே பசுவினைத் தேடுதல் போலக் கரைபவற்கே. (௩௪)

கரைபொரு வார்கடல் சூழ்தரு வார்சிங்கைக் காவலவ
வரைபொரு வார்முலை மங்கையர் தம்மை மணந்திடினுந்
திரைபொரு கங்கைச் சிவமறை யாவுந் தெரிந்திடினு
முரைபொரு சண்முக வுன்னடிக் கீழ்வந் துறங்குவனே. (௩௫)



உறங்கும் பொழுதினிற் சாக்கிரஞ் சொப்பன முண்டுகொல்லா
வறங்கும் பொழுதும் வளர்சிங்கை வேல வயனடைந்தே
யுறங்கும் பொழுது முளதோ வுயர்சுக மோய்ந்தொடுங்குங்
கறங்கும் வணங்கத் துயில்வார் பெறும்பயன் காட்டுதியே. (௩௬)

காட்டுதி மூன்று புரத்தையுஞ் சுட்டுக் கடந்தநிலை
கூட்டுதி யென்னை யடியார் குழாத்திற் கொலும்பிணியை
யோட்டுதி மாய வலையினிற் சிக்கா துயர்வழியைத்
தீட்டுதி சிங்கை நகர்மே லெழுந்தருள் சின்மயனே. (௩௭)

சின்மய மாஞ்சிங்கை வேலவ னேயுன் றிருவடியைக்
கன்மய மாகிய வென்மனத் தேவைத்த காரணத்தா
லுன்மய மாகிய நின்மலா தீதத் துயர்துரியச்
சொன்மய மாமிடத் தற்பக லற்ற சுகம்வருமே. (௩௮)

சுகந்தருஞ் சிங்கைச் சுடர்விளக் கேயுன் சொரூபமதை
யகந்தனிற் கொண்டு திரிவேன் றிரிமல வாணவஞ்சண்
முகந்தனைக் காணும் பொழுதே முழுது முடிந்திடுங்காண்
பகந்தரு மாறுன் குணங்களுங் காணப் பகருதியே. (௩௯)

பகர்கின்ற மாயா மலமென யாவும் பகுத்தபின்னர்
சுகர்சொல்லு மோன வடிவாஞ் சுருதியின் சொற்பொருளைப்
புகர்கொண்ட யானை முகவற் கிளையாய் பொலியுஞ்சிங்கை
நகர்வந்த சாமி தருவாய் நசையை நசிப்பதற்கே. (௪௰)

நசையா மலத்தை நசிப்பாய் நமனென்னை நாடிவரி
னசையா திருக்க வருடரு வாய்சிங்கை யாறுமுகத்
திசையா மனசைத் தெருட்டாய் சினந்தனைத் தீர்த்துநல்ல
குசையா சனத்தி லிருத்திவைப் பாயென்னைக் கொண்டவனே. ()

கொண்டா டுகோபக் குணத்தாற் கவுசிகன் கோப்பழிந்தான்
பண்டா நகுடனும் பங்கமுற் றுனரி பாற்குலிச
மண்டா தகன்றதும் பொய்யோ வரிவைய ராதரவின்
மண்டா திருக்க வகையரு ளாய்சிங்கை மன்னவனே (௪௨)

மன்னுயிர்ச் சஞ்சித நோக்கான் மறையு மலத்துருத்தி
தன்னுடன் போகும் பிராரத்தந் தற்பர ஞானமதாற்
றுன்னுமா காமியந் தோன்ரு தகலுமிச் சூழ்ச்சியினை
யின்னு மருளா திருக்குதி யேசிங்கை யெல்லையனே. (௪௩)

எல்லையில் வேள்வி விரதமுந் தீர்த்த மெழிற்றருமஞ்
சொல்லிய புண்ணியம் பூசைக ளாற்றிற் ருெடர்பவங்க
ளில்லவை யாக்க லெளிதோ மருவி யியற்குருவாய்
வல்லையில் வந்து வளந்தா வயஞ்சிங்கை வாணிகனே. (௪௪)

வாணிக் மோங்கி வளர்சிங்கை வேலன் வளஞ்சிலம்பின்
கேணியின் மூழ்கிக் கிளர்வரின் ஞானக் கிளிமொழியின்
பாணியின் மூழ்கிப் பரானந்தங் கொண்டு பணமணிய
நாணிய பாங்கி நடுவே வருகி னலமில்லையே. (௪௫)

இல்லாளும் வைவ ளினம்வையு மீன்றவெ னன்னையுட
னெல்லாரும் வைவர் பொருளவர்க் கீயவெற் கில்லையென்கிற்
சொல்லாரு மாமறைச் சுத்தா வுனக்குத் தொழும்புசெய்ய
வில்லாரும் வேலைத் தொடுப்பாய் விறற்சிங்கை வேடவனே. (௪௬)

வேடா தருமமு மூன்றெனச் செப்புவர் மேதினியில்
வாடா வணக்கம் பிதிர்களின் பாச வகைத்தருமம்
பாடா பொழில்குளம் பண்புட னூற்றல் பசுதருமந்
தேடா வுனைத்தொழல் சிங்கையின் வேல சிவதன்மமே. (௪௭)

தன்மங்கள் யாவினுந் தன்னுயிர் போலத் தனித்துயிர்கொல்
கன்மங்க ணீக்கிக் கருணைகொண் டாடிக் கசிந்துருகிக்
கன்மங்கை மைந்த பெரிதே யுனைத்தொழல் கண்டனன்காண்
புன்மங்கத் தானு மிதியா துசிங்கா புரத்தரசே. (௪௮)

சிங்கா புரமதச் சீடக் களிற்றின் செயிரறுக்குஞ்
சிங்கா புரமதச் சூரனைக் காய்ந்தவ சீர்புரிகச்
சிங்கா புரமதச் சேட்டையி னூற்கிழி செந்தனத்தார்
சிங்கா புரமதச் சாமீ யுனைத் தொழச் சிக்கறுமே. (௪௯)



சிக்கி மலத்திற் றிகைக்கின்ற சீவத் திறங்களெல்லாம்
பக்கி வலையினிற் பட்டது போலப் படுந்துயர்க்குத்
தக்க மருந்துன் னடியிணைத் தாமரை யென்றறிந்தேன்
றிக்குக ளெட்டும் புகழ்பொங்குஞ் சிங்கைத் திகழ்குகனே. (௫௰)

குகனே சடாட்சர மன்ருே குவலயக் கோலமுஞ்சண்
முகனே சமயங்க ளாறையுங் காட்டு முறைமையெட்டாப்
பகனே யுடம்புனக் கென்றறிந் தேனினிப் பாய்மயிலிற்
சுகனே தரவரு வாய்சிங்கை மாமணிச் சுந்தரனே. (௫௧)

சுந்தர னேசுப் பிரமணி யாவுனைத் தோத்திரத்தா
லந்தர மேசுகத் தாளிணை கண்ட வறிவுடையோர்
மந்தர மேவிய வின்பமும் பொல்லா மயக்கமென்றே
தந்தர மில்லா விடஞ்சிங்கை யானெனத் தங்குவரே. (௫௨)

தங்கும் பரப்பொருள் சாயா புருட னெனத்தடித்துக்
கங்குன் மலமழி காட்சியுன் ருெற்றக் கருணையன்ருே
பொங்கும் விளக்கம் புலிசூ ரியனெனப் போதகத்தை
யெங்கும் பரப்பி விளக்கிடு சிங்கைய வேமுறவே (௫௩)

ஏமந் தருமழை யம்பர் வாக்கு மெழினிமித்த
மாமந் தரகுரு வாய்மொழி யாரண மாய்ந்திடினுங்
காமந் தருமன முண்டேற் பவக்கரை காண்பரிது
சேமந் தருஞ்சிங்கைத் தேவே யொருமொழி செப்புதியே. (௫௪)

செப்புங் களிற்றின் கரத்தொடு மூக்குஞ் செறிபசுப்பா
லப்புடன் சேர்ந்து கலப்பது போல்விளங் கத்துவித
செப்ப முரைத்தருள் சிங்கா புரத்துவண் டேசிகநிற்
கொப்பு முயர்வு முளதோ வுலகி லுரைப்பதற்கே. (௫௫)

உரைபடு சந்தன நீரின்றித் தாக்குவ ரூருமுண்ணி
புரைபடு மூடர் புகலு மெருமை பொருவுகின்ற
வுரைபடு தார்க்க ருழன்மொழி கேட்பவ ருய்வதெங்ஙன்
கரைபடு சிங்கை முருகா வெனிற்பிணி காய்ந்திடுமே. (௫௬)

காய்ந்திடு வேலினைக் கைப்பிடித் தாயுன் கதைகளெல்லர
மாய்ந்திடி னீயுனை யாரென் றறியிலை யன்றியென்னை
வாய்ந்திடக் கண்டிலை மாயோன் மருகவிவ் வாசகத்தை
யோய்ந்திடக் காட்டிவைப் பாய்சிங்கை மேவிய வுத்தமனே. (௫௭)

உத்தம நீகட லென்னுயி ரப்பதி லுப்புமலக்
கத்திய் கன்மம் வளியலை போதந் தருமிரண்டு
சத்தியு முன்னிட முண்டே சகத்தினைத் தாங்குபஞ்ச
நித்திய வேலை நிராமய னேசிங்கை நின்மலனே. (௫௮)

நின்மல னேயுனைக் கண்டவ ரென்று நிதம்பிதற்றல்
வன்மல நீக்க வகையறி யாது வரிவிரல்காண்
டன்னுனி தொட்டிட றன்வாய் முகத்தினைத் தான்கறித்துத்
தின்னுதல் போலுந் திருவளர் சிங்கைச் சினகரனே. (௫௯

சினகர மொன்றிலை யென்னக மேயெனத் தேர்ந்தறிய
மனமிகு மச்ச மிலச்சையுஞ் சீல மலப்பயிர்ப்புந்
தனமிகு சாந்தியுஞ் சாதியு மார்க்கச் சடங்குகளுந்
தினகரன் முன்பனி போற்சிங்கை வேல சிதறுதியே. (௬௰

சிதறிய வாணவ மாதவத் தார்செயுஞ் செய்கையெல்லாம்
பதறிய காற்றை நெருப்பாற் சுடுதற் பகர்ககன
முதறிய மாமழை தன்னூற் கழுவுதற் கொப்பிடலாங்
கதறிய சேவற் கொடிபயில் சிங்கைக் கடம்பவனே. (௬௧

கடந்தரு யானை தறியினைத் தாக்கிக் கதித்தெழுதன்
முடந்தரு நாயின் முழக்கத் தொழுகின் முருகசிங்கை
விடந்தரு கன்மி செருக்குற் றியானென வெம்புதலுஞ்
சடந்தரு மாயை யிரிந்தார் செயலுஞ் சரியுளவே. (௬௨

சரியையிற் தத்துவ மூன்றுபத் தாறையுந் தள்ளியப்பாற்
கிரியையிற் றன்னைப் பிரியா தருவின் கிளர்வடிவாய்த்
தெரியையிற் போத மொழிப்ப தியோகந் திருவருளுங்
கரையையின் ஞானந் தருஞ்சிங்கை காக்குங் கதிபதியே. (௬௩)



கதித்திடு பக்குவர்க் கண்டீ வரர்க்கொரு கல்லுரையா
மதித்திடு மந்த தரர்க்குச் சகுனப்புள் வாக்கதுவாம்
விதித்திடு மந்தர் மதுவுண்ட தும்பி விடாவசனந்
திதித்திடுஞ் சிங்கை முருகோன் றிருவருள் சிந்தையிலே. (௬௪)

சிந்தை குடிகொண்ட தேவன் சிவசுப் பிரமணிய
னெந்த விதமு மிலாதழிப் பானென் னிருவினையால்
வந்த பிணிகளை மாயோன் றருமருள் வாரணத்தை
யுந்தமுறச் சிங்கை வந்தணை வானென் னறுமுகனே. (௬௫)

முகமா றுடையன் கரம்பன் னிரண்டுள மூர்த்தியருண்
முகமா றுடைய விநாயகன் பின்னவன் முப்பொழுதும்
பகமா றுடையன் பணிசெயும் பக்தர் படுந்துயர்ஞா
பகமா றுடையு பரன்சிங்கை வாழும் பசுபதியே. (௬௬)

பசுபதி பாச மனாதி யெனநூல் பகர்ந்தவற்றுட்
பசுபதி பாச மனாதி செயற்கைப் பயன்றருவாய்
முசுபதி யான முதல்வனுக் கன்று முகங்கொடுத்தாய்
வசுபதி சிங்கை வருவா யெனக்கு வரந்தரவே. (௬௭)

வரந்தருஞ் சிங்கை வளம்பொலி வேலன் வனத்தருள்காண்
கரந்தருங் கால மறையூர் மறைபல கன்மறைபோற்
பரந்தரு மென்றும் பதையா திருக்குதி பாழ்மனமே
யுரந்தரு ஞான வடிவாய் நிலைகொள வுன்னுதியே. (௬௮)

உன்னும் பிரபஞ்ச கோலமும் வாழ்க்கை யுயர்நலமுந்
துன்னிய கானற் சலமிலைத் தோடகத் தோயமும்போ
லென்னு ளறிந்திருந் தானம னேற்றினி லேறிவரி
னுன்னை யணைவ னுறைசிங்கை வேலுக் குரியவனே. (௬௯)

உரியவ னுந்தனைக் கண்டுகொண் டாடிட வோங்குதவம்
புரிபவ னேமத யானை பிணித்திடப் பொங்குகல்வி
லரிய கயிறுரிப் பான்வெளி யோடி யகப்படுத்தத்
திரிபவன் சிங்கைத் திகழ்முரு கேசனைச் சிந்திக்கவே. (௭௰)

சித்திக்குஞ் சிங்கைச் சிவகுரு நாதன் றிருவடிகண்
முத்திக்கு வாய்த்த முதற்கா ரணமென முன்னறியா
தெத்திக்குந் தேடி யிரிவார் கதிநிழன் மூடுதற்குக்
கொத்திமண் போடுவ ரந்தக் கரணக் குறியுடனே. (௭௧)

குறிக்கின்ற மாயக் குவலயந் தன்னிற் குலவினன்று
யெறிக்கின்ற சந்திர சூரிய ரேத்து மெழிற்பொருளும்
வெறிக்கின்ற மாதனச் சேர்க்கையும் வீடும் விழலெனயான்
றெறிக்கின்ற தாளருள் சிங்கையில் வந்த சிகாவளனே. (௭௨)

சிகாவள மேறித் திரிதரு வேலவ சிங்கையிற்சண்
முகாவளந் தாமுரு கேசா முயலும்பொய்த் தத்துவங்க
டகாவ்ள மென்று தனித்தனி தள்ளித் தனிமுதனீ
பகாவள மென்றும் பகுத்தறி வேயிது பாட்டறிவே. (௭௩)

பாட்டறி வெல்லாம் பயன்றருந் தன்னைப் பகுத்தறியு
மாட்டறி வென்னும் வகையறிந் தான்மய நீருமன்றோ
கோட்டறி மாயன் மருகா குறியடி கொண்டவர்கள்
வீட்டறி வார்மறைச் சிங்கையின் வேல விளம்பரிதே. (௭௪)

விளம்புநற் றூயெனு மெய்யரு டன்னை விலங்விடா
துளம்புகக் கொண்டு மலமாயை யாவு மொழிப்பதற்கு
வளம்புக ழென்னிட மில்லையென் றேயுன் வனசமலர்த்
தளம்புலஞ் சூடினன் சண்முகா சிங்கைத் தலத்தவனே. (௭௫)

தலம்புகழ் சிங்கைத் தனிவேல வுன்றன் றயாநிதியா
னலம்பெற வுன்னைத் தரிசித்த காலையி னுனெனலுங்
குலம்புகழ் வாழ்க்கையுங் குற்றமு நன்மைக் குறியருளும்
வலம்பெற யாவு மறைந்திட நின்னை மருவுவனே. (௭௬)

மருவிய வென்னிலும் வார்முலை தன்னிலும் வாழுயிர்கண்
மருவிய காக்கைக் கொளியொன்று மெய்யிது வண்மலரு
மருவிய வாசமும் போலே யிருப்பினு மன்னுமின்ப
மருவிய ரண்டிட லுண்டயி லோன்சிங்கை மாநிலத்தே. (௭௭)

நிலத்தாற் பெயர்பெற்ற மன்னவர் கோடி நிகழுநல்ல
குலத்தாற் பெயர்பெற்ற வந்தணர் கோடி குலவுகல்வி
நலத்தாற் பெயர்பெற்ற நாவலர்கோடி நசிந்தனர்காண்
மலத்தாற் பிணிபட்ட வாறே வளஞ்சிங்கை மன்னவனே. (௭௮)

மன்னவ ராயினு மாய்வது நிச்சயம் வாழ்வதுபொய்
யென்ன வறிந்து மரகத மஞ்ஞை யிறையவுனை
யுன்ன வொருகால் வருங்கா னடுங்கி யொடுங்குமலச்
சின்ன மகலுந் திகழ்சிங்கை வேலவுன் சேவகத்தே. (௭௯)

சேவகத் தெங்குஞ் சிறக்கும் வளர்சிங்கைச் சேயடியைப்
பாவகத் துள்வைத்துப் பாட நினைக்கின்ற பான்மையது
பூவகத் துள்ள கடனீ ரளத்தலும் போர்க்களத்திற்
சேவகத் தம்பெய்தல் கையிலி மானுஞ் சிறப்பிதுவே. (௮௰)

இதுவது வென்று மெனதுன தென்று மியம்புமெல்லா
மதுமிக வுண்டவன் வாசக மேயென்று மாமறையின்
முதுமொழி சிங்கை முருகா தெரித்திடு முத்தமிழின்
பொதுநலந் தந்தருள் போதா புராணநற் பூரணனே. (௮௧)

பூரண னுற்பவ மில்லா னிதமும் பொலிந்திடுவன்
காரண மூன்றுபத் தாறுங் கடப்பன் கதிபெயராத்
தாரணன் சூக்குமன் றூழா னுயரான் றனிவெளிகால்
சீரண காலத் தினுந்திகழ் வேற்சிங்கை சேர்பவனே. (௮௨)

சேர்பவ மேழுந் துடைப்பான் சிவன்மகன் சிங்கைவெற்பிற்
கார்பொழின் மேவி வருவார் கரத்திற் கணையுடையா
ரேர்பெறு காம வடிவுள ரின்பத் தியல்புடையார்
தேர்மொழி சொல்லிலர் செய்வ தியாது சிறுநுதலே. (௮௩)

சிறுநுதல் வள்ளியை வேட்டவன் றெய்வஞ் செறிகளிற்றின்
முறுவலைப் பெற்றவுன் முத்திபெய்ஞ் ஞான முழங்குமெனின்
மறுபவ மின்றி மழையிருட் சூரியன் வன்சிறைநீக்
குறுபவ ரென்ன வுளமகிழ் வேன்சிங்கைப் பூபதியே. (௮௪)

பூரிய மாகிய சிங்கையைப் போற்றும் புனிதவுன்றன்
றாரிய மாகிய ஞானந் தனைக்கண்ட தூயவர்தங்
காரியங் கூற லெளிதோ ககனத்தைக் காற்படியால்
வீரியம் பேசி யளப்பது போலும் விதமதுவே. (அரு)

அதுநா னெனுமறை யாகம நீயது வாவையென்னும்
பொதுவா லிரண்டுஞ் சரியென ஞானி புகலுவன்கா
ணிதுவே றதுவே றெனக்கறை ஞானி யியம்புவதை
முதுவேல் விடுத்தழி முற்சிங்கை காக்கு முறையவனே. (அசு)

முறைவளர் தோப்பு முகில்வளர் குன்று முதிருநல்ல
துறைவளர் தெப்பமுந் தூண்வளர் மாடமுந் தூயசதுர்
மறைவளர் வேலன் வளஞ்சிங்கை வாவியின் வாய்க்குமுத
மிறைவளர் வல்லி யிதையான் மலர்த்து மிளமதியே. (அஎ)

மதிக்கின்ற போதக் குரங்கினை விட்டு மறந்திடநீ
விதிக்கின்ற போதவ் விறற்குரங் கேமன மேவிவந்து
குதிக்கின்ற தாலிக் குளசிங்கை காக்குங் குகமுருகா
வுதிக்கின்ற ஞான வடிவே லெறிந்ததை யோட்டுதியே. (அஅ)

ஓட்டுதி யென்மனத் தோயாப் பழக்கத் துறுபிணியை
வீட்டுதி வெம்பவந் தாவு மலச்சிறை மேவுமென்னை
மீட்டுதி யுன்ற னடியிணைப் போதையென் மேற்சிரசிற்
சூட்டுதி சிங்கைச் சுடர்வேற் குகநீ துணையெனக்கே. (அகூ)

துணையெனக் குண்டு முருகா நினது சுடர்வடிவே
லிணையெனக் கில்லை யினிமே லுனையென் னிருதயத்திற்
கணைவீழ் பொழுது மறவேன் மறக்கிற் கணக்கிலவா
யணைதான் கடக்கு மழிபவஞ் சிங்கைக் கரியவனே. (கூ0)

அரியவ னேயுனை நம்பா தவர்க்குனை யண்டினவர்க்
குரியவ னேயுமை மைந்தா வரியயற் குண்மையதாய்ப்
பெரியவ னேமுரு கேசா வுனைத்தொழும் பெற்றியர்க்குப்
பிரியவ னேசிங்கை வேலா வுனையான் பிரிகிலனே. (கூக)



பிரியா தவநம சீலா நமகுரு பீடநம
துரியா நமசிவா யநம தூயா நமதுயரை
யரியா நமவெனை யாளா நமசிங்கை யந்தணவா
தரியா நமவா றெழுத்தே நமநம தாரகமே. (கூஉ)

தாரா சரணந் தனிவேல் சரணந் தமிழ்நிலத்தைப்
பேரா சரணம் பிதாவே சரணம் பிறப்பையெல்லாந்
தீரா சரணஞ் சிவமே சரணம்வண் சிங்கைவெற்பின்
வீரா சரணம் விமலா சரணம் வினையழியே. (கூங)

அழியா யடைக்கல மையா வடைக்கல மைங்கருணை
விழியா யடைக்கலம் வேலா வடைக்கல மெய்ப்பொருளின்
கிழியா யடைகலங் கேதா வடைக்கலங் கேடில்சிங்கை
யுழியா யடைக்கல மோமோ மடைக்கல முத்தமனே. (கூச)

உத்தம போற்றி யுயர்குக போற்றி யொழுங்குதரு
வித்தக போற்றி வியாபக போற்றி விகாரமிலாத்
தத்துவ போற்றி சராசர போற்றி சரவணப
வத்துவ போற்றி வளர்சிங்கை ஞான வளத்தவனே. (கூரு)

ஞான வளப்பந் தருவாய் நயந்து நனையருளின்
பானந் தருவாய் பருகிலெப் போதும் பவப்பிணியி
னீன மழியு மிளமைவந் தெய்து மிருசுடரும்
வானம் வலம்வருஞ் சிங்கையின் வேல வசீகரனே. (கூசு)

சீகர முத்துஞ் செழுஞ்சந் தனமுந் திருகுசங்கு
மாகரம் விட்டணி வார்க்கணி யாங்கே யருந்தவத்தின்
சேகரந் தங்குந் திருச்சிங்கை வேலின் றிகழ் விழியார்
சாகரம் வந்த வமுதனை யார்தம்மைச் சார்பவர்க்கே. (கூஎ)

சாரும் வினையால் வருங்கய ரோகஞ் சலமிழிவு
தீரும் வலியுஞ் செறிகுள்ம மோடுஞ் சிரப்பிளவை
பேரு மிலையெனப் பின்னிடும் பேதிப் பிசாசகலுஞ்
சேருஞ் சிறப்பு திகழ்சிங்கை வேலனைச் சிந்திக்கவே. (கூஅ)

சிந்திக்க வித்தைத் திறம்வருஞ் சிங்கைத் திருவுடையாய்
வந்திக்க வாழ்வின் வலம்வரும் மக்கண் மனைபெருகுஞ்
சந்திக்க ஞான நிலைவருஞ் சற்குணஞ் சார்ந்துவரும்
பந்திக்க வைக்ய பலம்வரு முன்றன் பதத்தினையே. (௯௯)

பதங்களும் பன்னிரு தோள்களும் வேலும் பகர்கவியும்
விதங்கொளும் வர்ணக் கொடியும் விறன்மயில் வெம்பரியுஞ்
சதங்கொளும் வள்ளியுந் தெய்வயா னையுமென் சண்முகவற்
புதங்கொளுஞ் சிங்கைப் புலவனும் வாழிய பூமகளே. (௱)

முற்றிற்று.

வேலு மயிலுந் துணை.

## தேவாரம்.

ஒருமுழமுள்ளகுட்டமொன்பது துளையுடைத்தா
யரைமுழமதனகல மதனில்வாழ்முதலையைந்து
பெருமுழை வாய்தல்பற்றிக்கிடந்து நான்பிதற்றுகின்றேன்
கருமுகி றவழுமாடக்கச்சியே கம்பனீரே.

ஆறேறு சடையானை யாயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையிற் பலிகொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
யேறேறும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே.

அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதங்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாய
மெடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே.

எள்கலின்றி யிமையவர்கோனை யீசனை வழிபாடுசெய்வாள்போ
லுள்ளத்துள்கி யுகந்துமை நங்கைவழிபடச்சென்று நின்றவாகண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிட வஞ்சிவெருவியோடித் தழுவிவெளிப்பட்ட
கள்ளக்கம்பனை யெங்கள் பிரானைக்காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

திருச்சிற்றம்பலம்.

உ
வேலுமயிலுந்துணை.

சிங்கப்பூர்ச்

# சுப்பிரமணியசுவாமி

பேரிற்பாடிய

# சித்திரகவிகள்.

## மாலைமாற்றுவெண்பா.

தாவா மதவேதா சாதாதி யாவேல
காவா விதாசிதா காசாதா - மூவாமூ
தாசாகா தாசிதாவி வாகால வேயாதி
தாசாதா வேதமவா தா.

(இ-ள்.)— தாவா மதவேதா; சாது ஆதியா; வேல; கா வாவு இதா; சிதாகாசா; தாம் மூவா மூதா; சாகாதா; சிதாவிவாகா; ஆல வேய் ஆதி தாசு ஆ தா, வேதம் அவா தா.

ஆலத்தைக் கண்டத்திலே யணிந்திருக்கின்ற ஆதியாகிய சிவபெருமானுடைய அடிமையாகின்ற (தா) வல்லமையையும், வேதமாகிய ஞானத்தை யறியவேண்டு மென்கின்ற அவாவையும் தந்தருள்வீராக. (க)

## அஷ்டநாகவெண்பா.

நீதா குகாதே சிகனியம சாதனு
தாதா ளதித தனிவாகை - போதக்
களப புளகிதவா காகுமரா சிங்கை
வளவா கதிர்வேல வா. (உ)

## துவிநாகவிருத்தம்.

கூறு கங்கையா கோல வேலவா
வீறு வீடுதா வேத சிவாகம
தேறும் யாகபூ சிங்கை வானவா
வாறு வாலகா வானைதா வாகனே. (௩)

## இரதவெண்பா.

கார்வந்தே யீயாரூர்க் காவலவ னூங்கருளாற்
பார்வந்தே சிற்பனூற் பாவலர்ப்பேர்ச் - சீர்பெறவே
சிங்கா புரிவளரச் செய்தார்காண் பேரோங்கு
சிங்கார வேலவனூர் தேர். (௪)

## கமலவெண்பா.

தோகையிகை யோகைமிகை சூகையுகை யாகைகுகை
சாகைவகை வூகையுறச் சாருவது - மூகையா
மங்கைக் குரையருளு வாசகரின் கோவணையுங்
கங்கைமகன் சிங்கைகுகன் கை. (௫)

## சதுரங்கவெண்பா.

ஆறு பெறுமுகத் தைமுகத்தான் காண்கவேண்முன்
சேறு பெறுவேலைச் சிங்கைதனில் - வீறலையக்
கூறுசூர்க்கொல் கொள்கை யறியலை வேகமுறு
ஆறுமுக வேலை யறி. (௬)

## துவிவெண்பா.

௧. மாலைதா வெற்றி வளர்ந்தா வயமலியும்
வேலைதா நெற்றி விழிவருவாய் - நீலையுறச்
சுற்றித் தருசோலைச் சுந்தரஞ்சேர் தண்சிங்கை
பற்றித் தருமாலை பார்.

௨. வெற்றி வளர்ந்தா வயமலியும் வேலைதா
நெற்றி வழிவருவாய் நீலையுறச் - சுற்றித்
தருசோலைச் சுந்தரஞ்சேர் தண்சிங்கை பற்றித்
தருமாலை பார்மாலை தா. (௭)

## நிரனிறைக்கட்டளைக்கலித்துறை.

போற்றுந் தொடைபடை வீடுகவரி பொலிபரிதேர்
தோற்று மிலஞ்சி யரிசனச் சோலை சுழல்கமுகி
னேற்றந் தருமணப் பாளையுஞ் சாற்று மெழிற்கிளிதென்
காற்று முடையவன் மைத்துனன் காண்சிங்கை காப்பவனே. (௮)



## திரிவெண்பா.

௧. ஆளுவேன் மன்மதா அண்டமெலா மையமின்றி
மாளுவாய் தன்மமதை மண்டலத்துன் - ருளிணைக்கு
வன்மனது தெண்டனிட வைத்திருக்குஞ் சிங்கைதனின்
மன்றலுற வண்டமிழை வைத்து.

௨. மன்மதா அண்டமெலா மையமின்றி மாளுவாய்
தன்மமதை மண்டலத்துன் ருளிணைக்கு - வன்மனது
தெண்டனிட வைத்திருக்குஞ் சிங்கைதனின் மன்றலுற
வண்டமிழை வைத்தாளு வேன்.

௩. அண்டமெலா மையமின்றி மாளுவாய் தன்மமதை
மண்டலத்துன் ருளிணைக்கு வன்மனது - தெண்டனிட
வைத்திருக்குஞ் சிங்கைதனின் மன்றலுற வண்டமிழை
வைத்தாளு வேன்மன் மதா. (௯)

## கரந்துறைவெண்பா.

௧. பொருட்டாய்ப் பொருளைப் புவியினலந் தோயார்
தெருட்டா ரெனவே தெளிந்தீ - ரருட்பொருள்க
ளாயடிக ளேயு மறிவினர்கள் வான்சிங்கைச்
சேயடிக ளாவர் தெரி.

### இதனுட்குறள்.

௨. பொருட்பொருளார் புன்னலந் தோயா
ரருட்பொரு, ளாயு மறிவி னவர். (௰)

## தனுவெண்பா.

வாகனமே செஞ்சேவல் வண்கொடியே மால்யானை
யாகமுறும் வள்ளி யயற்கொடியே - யோகமுறும்
வேதியர்கள் வேண்டிவரும் வேலவற்குச் சிங்கைநகர்
மாதவர்கள் போற்று மயில். (௰௧)

## வினாவிடைவெண்பா.

வாலரிதன் னுமமெது வண்மைபெறு மாமேய்த்த
வாலரிதா னுண்டதென்னே யாரீறென் - வாலில்லா
வேங்கையாய் நின்றவடி வேலவனே வாழ்ந்திருக்குஞ்
சிங்கப்பூ ரென்றே தெளி. (௰௨)

## கட்டளைக்கலித்துறை.

இருபா.

௧. தேருங் கரியுஞ் செறியும் பரிகளுஞ் சேருபதத்
தாருந் திரங்கொள்ளப் பாருல கேந்தர சானவர்க
டேரு மினமறைச் சேந்தன் முருகன் திருவடியைப்
பாருமின் பாருமின் சிங்கையிற் றங்குறற் பங்குறவே.

## இதனுள்வெண்பா.

௨. தேருங் கரியுஞ் செறியும் பரிகளுஞ்
சேருபதத் தாருந் திரங்கொள்ளப் - பாருல
கேந்தர சானவர்க டேரு மினமறைச்
சேந்தன் முருகன் றிரு. (மிங

## அடிநிலைந்திரங்கல்.

பிறிதுபடுபாட்டு.

௧. தெரிவரி வேலன் றிருவரு ளின்மையிற் சிங்கைதனிற்
கரிதிரி யும்பரி யோடுழை வாற்புலி காட்டுறுவெம்
பரிகரி யோடுகற் பாரிளை யொன்றி யணியடிகள்
வரிபரி விற்கந்த மாதே கரைவள் வரைக்குவட்டே.

மோனைபிறழாத

## நேரிசையாசிரியப்பா.

௨. தெரிவரி வேலன் றிருவரு ளின்மையிற்
சிங்கை தனிற்கரி திரியும் பரியோ
டுழைவாற் புலிகாட் டுறுவெம் பரிகரி
யோடுகற் பாரிளை யொன்றி யணியடி
கள்வரி பரிவிற் கந்த
மாதே கரைவள் வரைக்கு வட்டே, (மிச

## நடுவெழுத்தலங்காரம்.

தெளியுந் தருப்பை திரியும் பொருளுஞ் செறிபிறப்பு
மளியு மழியு மலர்மே லியலும்வல் லாம்பலொடு
வெளியும் பொருந்து பரப்பெய ராறிடை மேவியன்றே
ஒளியும் வலம்வருஞ் சிங்கையின் வேல னுறைகுவனே.
குசம், சரம், பவம், மணம், இபம், சிவம். (மிரு



அஷ்ட நாகபந்தம்.

௧௫-ம் பக்கம், ௨-ம் செய்யுள்.

# இரதபந்தம்.

௯௬-ம் பக்கம்,— ௬-ம் செய்யுள்,



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கரை நிலைச் சபை.
பதிவு இல: 73
10. 5 1950
அறக்கட்டளை நிலையம்,
கசெட் இல. 14805
7. 6. 1968